# தமிழ்ச்சிட்டு

கடகம் 2033
(சூலை - 2002)

விலை: உரு. 3.00

குரல் 25
இசை 7



சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்

# சொல்லினும் செயலே மேல்!

அறிவுரை மட்டிலும் போதாது— அதன்
ஆக்கச் செயலும் வேண்டும்!—வெறும்
செறிவுரை கூறிப் பயன்விளைமோ? — வினை
செய்யவும் தெரிந்திடல் வேண்டும்!

அன்புரை மட்டிலும் போதாது —அதில்
அரும்பிடும் வினைகளும் வேண்டும்! —நல்ல
தென்புரை மட்டிலும் பயன்தருமோ? — நிலை
தேற்றிடும் செயல்களும் வேண்டும்!

எழுத்துரை மட்டிலும் போதாது— அவ்
வெழுத்துகள் செயல்பெறல் வேண்டும்! — வாய்
வழுத்துரை மட்டிலும் நலந்தருமோ? —துணை
வாழவும் செய்திடல் வேண்டும்!

வழிசொலல் மட்டிலும் போதாது—நாம்
வழித்துணை ஆகவும் வேண்டும்!— பிறர்ப்
பழிசொலல் மட்டிலும் திறம்பெறுமோ?— அப்
பழியைநாம் தவிர்த்தலும் வேண்டும்!

சொல்லுதல் மட்டும் போதாது — நாம்
சொன்னதைச் செய்தலும் வேண்டும்!—வாய்
மெல்லுதல் பசியினை அடக்கிடுமோ?— உரை
மேலெனில் செயலையும் தூண்டும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் -1982

---

# தமிழ்ச்சிட்டு

## கட்டண விளக்கம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 36.00 | 200.00 |
| தனியிதழ் | 3.00 | |
| வாழ்நாள் கட்டணம் | 350.00 | |

**தமிழ்ச்சிட்டு (சிறுவர் கலை இதழ்)**
செந்தமிழ் அடுக்ககம், மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302. தொலைபேசி : 277 1231.

# தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலை இதழ்

குரல்-25 இசை-7


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு


நிறுவனர்:

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:

**தாமரை பெருஞ்சித்திரனார்**



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 277 1231


## ஒழுங்கு

பள்ளிக்குப் போன பிள்ளை அழுது கொண்டே வீடு திரும்புகிறான்.

"பள்ளிக்கூடத்தில் ஒழுங்காக இல்லை" என்று ஆசிரியர் அடித்துவிட்டாராம்.

வீட்டில் ஒழுங்காக இல்லை என்று அம்மாவும் அடிக்கிறார், திட்டுகிறார்.

ஒழுங்கு என்றால் என்ன?

எங்கே விற்கிறது? போய் வாங்கிப் பார்த்து அப்படி நடக்கலாம் என்று வருந்த வேண்டாம்.

ஒழுங்கு என்றால் பிறரைப்பார்த்து ஒழுகுவது. அதாவது அப்படியே நடப்பது.

சரி, யாரைப்பார்த்து நடப்பது. இரசினிகாந்தன் போலவா?

அப்படியில்லை — இந்தக் குமுக மக்கள் எப்படி வாழ்கிறார்களோ அதைப்பார்த்து வாழ்வது.

ஆனால் குமுக மக்களோ பொறாமையோடு இருக்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள், சாதி என்று பிரிவினை பேசுகிறார்கள், மதம் என்று கலவரம் செய்கிறார்களே!

— இவர்களைப் பார்த்தா நாம் பழகுவது. அதுவும் இல்லை.

அவர்களே விரும்பி அவர்கள் அப்படி இல்லை.

மக்களைச் சாதியால் பிரிக்கிற பிரிவினையாளர்கள்தாம் அப்படிச் செய்கிறார்கள்.

மதக் கலவரங்கள் நடத்தும் வன்முறையாளர்களே அப்படிச் செய்கிறார்கள்.

எனவே அவர்களை நாம் பின்பற்ற முடியாது.

ஆக — ஒழுங்கு என்பது யாரைப் பார்த்து ஒழுகுவது — நடப்பது?

உன்னிடம் மற்றவர்கள் எப்படி நடந்துகொண்டால் உனக்குப் பிடிக்கும்.

பிறர் உன்னைத் திட்டினால் உனக்குப் பிடிக்காது.

பிறர் உன்னை மதிக்காமல் போனால் தவறுதானே.

நம்மைத் தாழ்வுபடுத்தாமல் நல்லபடியாகப் பிறர் மதிக்க வேண்டும் என்றுதானே நாம் எண்ணுகிறோம்.

அப்படித்தான் நாமும் பிறரை மதிக்கவேண்டும்.

அதுதான் ஒழுங்கு.

நமக்கு எதை எதிர்பார்க்கிறோமோ அதை நாம் மற்றவர்க்கும் அளிப்பது தான் ஒழுங்கு.


நாம் மட்டும் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும், மற்றவர்கள் தாழ்ந்த நிலையில் இருக்கவேண்டும் என்பது ஒழுங்கு இல்லை.

எனவே ஒழுக்கம்தான் நம்மையும் உயர்த்தும், மக்களையும் உயர்த்தும். ✳

---


# இன்றைக்கே...


# இதைச் செய்து பாருங்கள்...




12 நூற்றளவி (செ.மீ.) X 75 நூ.அ. (செ.மீ.) அளவுள்ள இரண்டு தாள்களை எடுத்து, படத்தில் உள்ளதுபோல் சுருட்டவும்.


சுருட்டப்பட்ட தாள்களை 5 நூற்றளவி அளவு படுக்கையில் வெட்டவும்.





வெட்டிய இதழ்களைக் கீழ்நோக்கி மடிக்கவும்.

நடுப்பாகத்திலிருந்து சுருளை மெதுவாக இழுக்கவும்.




இது ஓர் அழகான மெழுகுத் திரி நிலை போன்று இருக்கும்.

செய்துபாருங்களேன்.

# அறிஞர்களின் அமைவுரைகள்-

## 'உண்மை' தெரிந்தது.

நான் இளைஞனாக இருக்கும் போது பத்துச் செயல்கள் செய்தால் அவற்றில் ஒன்பது செயல்கள் தோல்வி அடைவதைக் கண்டேன்; என் வாழ்க்கைத் தோல்வியாவதை நான் விரும்ப வில்லை. ஒன்பது முறை வெற்றியடைய என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்த போது எனக்கோர் 'உண்மை' தெரிந்தது. தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன்!

— **பெர்னார்டு சா.**

## பழைய செருப்பு!

நம்முடைய பழைய செருப்பைத் தைப்பதற்கு அத் தொழிலை நன்றாகப் பழகிய தொழிலாளியிடமே கொடுக்கிறோம். ஆனால் ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏய்த்துப் பேசி ஒப்போலை பறிக்கும் ஒருவரிடம் ஒப்படைக்கிறோம்!

— **பிளாட்டோ.**

## என் விருப்பம்!

என் கருத்துப்படி பேசினால் சாவுதான் அதற்குப் பரிசு என்றாலும் கூட நான் அதைத்தான் விரும்புவேனே தவிர உங்கள் கருத்துப்படி பேசி உயிர் வாழலாம் என்ற போதிலும்கூட நான் ஒருக்காலும் அதை விரும்பேன்.

— **சாக்கரடீசு.**

## அடிமை.

சிந்தனையை ஒடுக்கிவிட நினைக்கின்றவன் கொடுங்கோலன்! அக் கொடுங்கோன்மைக்குப் பணிகின்றவன் அடிமை!

— **இங்கர்சால்**

## பிணத்திற்கு ஒப்பனை!

அடிமை நாட்டில் உள்ள மக்கள் எவ்வளவு ஏந்துகளுடன் வாழ்ந்தாலும் அவை யாவும்

தொகுப்பு: கு.அ. தமிழ்மொழி

உயிரற்ற உடலுக்கு ஒப்பனை செய்த நிலைக்கே ஒப்பாகும்.

— மாக்கசுவின்— அயர்லாந்து

## வெறுப்பு ஏன்?

நாம் சிலரை வெறுப்பதற்குக் காரணம் அவர்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாததுதான். அவர்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாததற்குக் காரணம் நாம் அவர்களை வெறுப்பதுதான்.

— இசுபானிய அறிஞர்

## தவறு செய்யாதவன்!

தவறே செய்யாதவன் யார்? எதுவுமே செய்யாதவன்தான்!

— உரூசுவெல்ட்டு.

## எதைப் படிப்பது?

ஏராளமான மக்கள் இக்காலத்தில் எப்படிப் படிப்பது என்பதை அறிந்துகொண்டார்கள். ஆனால் எதைப் படிப்பது என்பதைத்தான் அறியவில்லை!

—தி இரெவி சியார்

## கோழைத்தனம்

சரியானது எதுவென்று உணர்ந்த பிறகு அதைச் செய்யாமல் இருப்பதுதான் மிகப் பெரிய கோழைத்தனம்!


— கன்பூசியசு.

## வெட்கம்!

வீழ்வது வெட்கமன்று; ஆனால் வீழ்ந்தே கிடப்பதுதான் வெட்கம் உடையது!

—சீனப் பழமொழி


# நிலவில் உயிரினம் உண்டா?



நிலவில் வளி மண்டலம் இல்லை. அதனால் கதிரொளியின் வெப்பத்தினால் தாக்கப்படுகிறது. அதனால் நிலவின் மேற்பரப்பு அதிக வெப்பமாகவோ அல்லது குளிராகவோ இருக்கிறது. வெப்பம் 150° நூற்றளவி கொதி நீரைவிட வெப்பமானது. குளிராயின் 125° நூற்றளவி இது தென் துருவக் குளிரைவிட இருமடங்கு. ஆகவே உயிரினம் தோன்ற வழியில்லை.

# சிவப்பு வண்ணம் ஏன்?

நெடுஞ்சாலைகளிலும், தொடர்வண்டி நிலையங்களிலும், வளைவுப் பாதைகளிலும் வண்டிகளின் பின்புறமும், எச்சரிக்கையைக் குறிக்க சிவப்பு நிற ஒளிவிளக்குகள் அல்லது சிவப்பு வண்ண எச்சரிக்கைப் பலகைகள் பயன்படுத்தப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். வேறு நிறத்திலமைந்த விளக்குகளையோ, குறியீடுகளையோ, எச்சரிக்கைப் பலகைகளையோ ஏன் பயன்படுத்துவதில்லை? வேறு ஏதாவது சிறப்புக் காரணம் உண்டா?



மற்ற நிறங்களைவிட சிவப்பு நிறம் 'பளிச்'சென்று ஒளிரக் கூடியது. கண்களுக்கு எளிதில் தெரியக்கூடியது. பனிமூட்டம், புகைமூட்டம் சூழ்ந்துள்ள இடங்களில் சிவப்பைத் தவிர, மற்ற நிறங்கள் சரியாகத் தெரியா. நீலம், செந்நீலம் போன்றவை தெரியாமல் கூடப் போய்விடும்.

சிவப்பு வண்ணத்தைத் தவிரப் பிற வண்ணங்கள் தனித்தனி அலை நீளங்களைக் கொண்டவை. சிவப்பு ஒளி மட்டுமே பிற நிறங்களைவிட மிகக் குறைவான அலை நீளத்தைக் கொண்டுள்ளது. இத் தன்மையால் அது பிற நிற ஒளியைவிட நீண்ட தூரம் செல்லக் கூடியது.

நீண்ட நெடுந் தொலைவில் இருந்து பார்க்கும்போது மற்ற எல்லா நிறங்களையும்விடக் கண்ணுக்குத் தெரியக்கூடியது சிவப்பு வண்ணமே என்பதால். நேர்ச்சியை(விபத்தை)த் தவிர்க்க பயன்படும் இடத்தில் சிவப்புக்குறியீட்டை, அல்லது எச்சரிக்கைப் பலகையை, அல்லது சிவப்பு நிற விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

# வளி உருளைகளில் வண்ணங்கள் பூசப்படுவது ஏன்?

வளி உருளைகளில் வண்ணங்கள் பூசப்படுகிறதே, அவ் வண்ணங்கள் எதையாவது உணர்த்துகின்றனவா? உருளைகளின் மேல் பூசப்படும் வண்ணங்களுக்கும் உள்ளே அடைக்கப்பட்டுள்ள வளி(கேசு)க்கும் தொடர்பு இருக்கிறதா?

உருளையின்மேல் பூசப்பட்டிருக்கும் வண்ணத்தைக் கொண்டே உள்ளே உள்ள வளி எதுவென்பதை அறிந்துகொள்ள முடியுமா? முடியும்.

கருப்பு வண்ணம் பூசப்பட்டிருந்தால் — உயிர்வளி நிரப்பப் பட்டிருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம். (உருளையின் உடல் பகுதியில் கருப்பு வண்ணமும் கழுத்தில் வெள்ளை நிறமும் பூசப் பட்டிருக்கும்.)



கரிம வளிக்கு (ஆர்கான்) பச்சை வண்ணமும், 'அசிட்டிலின்' வளிக்கு கருஞ்சிவப்பும், 'நைட்டிரசு ஆக்சைடு'க்கு(வளி) நீல நிறமும் பூசப்படுகின்றன.



எனவே, வளி உருளைகளில் வண்ணங்கள் பூசப்படுவது அதில் உள்ள வளி எதுவென்று பிரித்துக் காட்டவே, அறிந்து கொள்ளவே.



# கடலில் காற்று அழுத்தத் தாழ்வுமண்டலம் ஏற்படுவதும் - அதற்கான காரணங்களும்



கடலில் ஒருபகுதியில் கதிரொளி அதிகமாகப் படும்போது அங்குள்ள காற்றுச் சூடாகி அடர்த்தி குறைந்து மேலே போய்விடுவதால் அங்கு அழுத்தம் குறைகிறது. அதனால் அங்குக் கடல்நீர் அதிகமாக ஆவியாகி முகில்கள் உண்டாகின்றன. அத்துடன் எண்திசைகளிலிருந்தும் காற்று அழுத்தம் குறைந்த பகுதியை நோக்கி விரைந்து வந்து மோதிக் கொண்டு சுழல் காற்றாக உருவெடுக்கின்றது.

# மழை வரும் பின். புழுக்கம் வரும் முன்.



மழை வருவதற்குமுன் காற்றில் ஈரப்பசை அதிகமாகிவிடுகிறது. அதனால் உடலில் இருந்து வெளியேறும் வியர்வை விரைந்து ஆவியாவதில்லை. எனவே புழுக்கமாக இருக்கிறது.

உடலின் புழுக்கத்தை வைத்தே சிலர் துல்லியமாக இன்று மழைபொழியும் என உறுதியாகக் கூறுவர். அவர்களின் கூற்றுப்படி மழை பொழியும். அதாவது பெய்யெனச் சொன்னால் பெய்யும் மழை.

# வாத்து அடை காப்பதில்லை.


கோழியும் வாத்தும் ஒரினப் பறவைகளே என்றாலும் கோழி நிலத்தில் வளரும் பறவை. வாத்து நீரிலும் நிலத்திலும் வாழும் பறவை.

கோழி முட்டை பொரிந்து குஞ்சாக வேண்டுமென்றால் வளி மண்டலத்தின் இயல்பு வெப்பநிலையைவிடக் கூடுதலான வெப்பநிலை தேவைப்படுகின்றது. ஆனால் வாத்து முட்டை இயல்பான வெப்ப நிலையிலேயே பொரிந்து குஞ்சாகிறது. அதனால்தான் கோழி முட்டைகளை அடை காக்கிறது. வாத்து அடை காப்பதில்லை. *

# குரங்கின் அச்சம்

குரங்குகள் பாம்புகளின் இரக்கமற்ற பிடிகளிலிருந்து அடிக்கடி தப்பிவிடுகின்றன. எனவே இத்தகைய போராட்டங்கள் இவ்விலங்குகளின் எச்சரிப்பு உணர்வை ஓரளவு வளர்த்திருப்பதில் வியப்பில்லை. மிக உயர்ந்த மரங்கூடப் பாம்புகளிடமிருந்து காப்பு அளிப்பதில்லை. தவிர, குரங்குகள் உறங்கும் இரவு நேரங்களில் இரைக்காகப் புறப்படும் பழக்கம் பாம்புகளுக்கு உண்டு. தரைக்கு வெகு உயரத்தில் உள்ள கிளையிலிருந்து காட்டு அரசர்களை இடித்துரைக்கும் மாந்தக் குரங்கு பாம்பைக் கண்டதுமே வெகுண்டு ஓடிவிடும்.

உண்மையில் குரங்குகளின் அஞ்சத்தக்க ஒரே வகைப் பகைவர்கள் பாம்புகள் மட்டுமே. அவற்றுடன் நடந்த போராட்டங்களில் பெற்ற படிப்பினையும் இயற்கைத் தேர்வுமே குரங்குகள் அஞ்சுவதற்குக் காரணம். பல வகைப் பாம்புகள் பல்கியுள்ள ஆப்பிரிக்கக் காடுகளில் குரங்குகள் பொந்துள்ள மரத்தை மிகமிக எச்சரிக்கையுடன் ஆய்ந்து பார்க்கும். முட்டைகள் உள்ள பறவைக் கூட்டுக்கு மாறாக நச்சுப் பாம்பு ஏதேனும் எதிர்ப்படலாம் என்பது அதற்கு நன்றாய்த் தெரியும்.




சில ஆண்டுகளுக்கு முன் குரங்குகளின் ஓர் இணை விலங்குக் காட்சிச்சாலைக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்டது.

இரண்டும் ஒரே கூண்டில் வாழ்ந்தன. ஆண் குரங்கு உடற்கட்டுள்ள மாந்தக் குரங்கு. கடுமையான முன்சினம் உள்ளது. இந்த இரண்டில் எதையும் அணுக ஒருவரும் துணியவில்லை. ஒருமுறை நாங்கள் அவற்றை

வேறு கூண்டுக்கு மாற்ற வேண்டி இருந்தது. இதை எப்படிச் செய்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. முதலில் குரங்குகளை இயங்கும் கூண்டுக்குள் புகச் செய்து, பின்பு அவற்றைப் புது இருப்பிடத்துக்கு எடுத்துப் போக வேண்டியிருந்தது.

இயங்கும் கூண்டின் கதவைப் பெரிய கூண்டுக் கதவை ஒட்டினாற் போல வைத்து மறு கூண்டுக்கு வரும்படி அந்த குரங்குகளுக்கு ஆசை காட்டி அழைக்க முயன்றோம். பெண் குரங்கு எளிதில் இந்தத் தந்திரத்துக்கு மயங்கிவிட்டது. ஆண் குரங்கோ அசைய மறுத்துவிட்டது. முடிவில் அது கடுஞ் சினம் அடைந்து தாவிக் குதிக்கத் தொடங்கியது.

சினம் கொண்ட ஆண்குரங்கு கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. நாங்கள் குழாய் வழியே குளிர் நீரைப் பீய்ச்சி அதன் மேல் அடித்தோம். இதனால் நல்ல பயன் விளைவதற்கு மாறாகக் கேடுதான் ஏற்பட்டது. ஏனெனில் பெண் குரங்கு இயங்கும் கூண்டிலிருந்து ஆண் குரங்கிடம் திரும்பிப் போய்விட்டது.



முடிவில் குரங்கு வீட்டு மேற்பார்வையாளர்க்குச் சட்டென ஓர் எண்ணம் தோன்றிற்று.


"பச்சைப் பாம்பு ஒன்றைக் கொண்டு வா, உடனே!" என்று இளம் உயிரியலார் வட்டத்தைச் சேர்ந்த பையனிடம் சொன்னார்.

சில நிமையங்களில் பச்சைப் பாம்பு வந்து சேர்ந்தது. கூண்டின் தரையில் பாம்பின் கரிய உடலைக் கண்டதுமே கலகக்கார ஆண்குரங்கின் சினம் பெரும் வியப்பாக மாறிவிட்டது. விழிகள் பிதுங்க, அது தற்காப்புச் சைகைகள் செய்தது. பிறகு பின்வாங்கத் தொடங்கி, புகலின்மை தோன்ற இடமும் வலமும் பார்த்தது.

பாம்பு ஊர்ந்து அருகே நெருங்கிற்று. பெண்குரங்கு இயங்கும் கூண்டின் மறு மூலையில் ஒண்டியது. கடைசியில் ஆண் குரங்கும் விருட்டென்று அதற்குள் பாய்ந்தது. நாங்கள் கூண்டுக் கதவை மடாரென்று சாத்தி மாந்தக் குரங்குகளை அப்பால் கொண்டு சென்றோம்.

பச்சைப் பாம்பைக் கண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக ஆண் குரங்கு அன்று முழுவதும் அச்சத்தாலும் பதற்றத்தாலும் நடுங்கிக் கொண்டிருந்தது.

# வால் விண்மீன்



உலகமும், மற்றக் கோள்களும் கதிரவனைச் சுற்றி வருகின்றன அல்லவா? அவை போன்று வால் விண்மீன்களும் கதிரவனை நீளவட்டப் பாதையில் சுற்றிவருகின்றன. வால் விண்மீன் உண்மையில் ஒரு விண்மீன் மட்டுமன்று. இது கதிரவக் குடும்பத்தைச் சேர்ந்த ஒளிரும் பொருளே ஆகும்.

கதிரவனிலிருந்து வெளிநோக்கிப் பாயும் கதிர்கள் மிகுந்த அழுத்தமுள்ளவை. வால் விண்மீன் கதிரவன் அருகே வரும் போது தலைப்பகுதியிலுள்ள வளியையும் துகள்களையும் இக் கதிர்கள் எதிர்ப்புறம் தள்ளுகின்றன. எனவே இப்பகுதி நீண்டு வால் போலத் தோன்றுகிறது.

வால்விண்மீன்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. பெரும்பாலானவை கண்ணுக்குத் தெரிவதில்லை. தொலைநோக்கி மூலம்தான் அவற்றைப் பார்க்க முடியும். வால்விண்மீனின் நடுப் பகுதி மிகுந்த ஒளியுடன் கூடியது. இதைச் சுற்றி வளிகள் நிரம்பியுள்ள பகுதியும் சேர்ந்து இதன் தலைப்பகுதியாகும். இது ஏறத்தாழ 50,000 அயிர மாத்திரி முதல் 1,50,000 அ.மா. வரை விட்டமுடையது. சிலவற்றில் வால் பகுதி ஏறத்தாழ 16 கோடி அ.மா. நீளமுள்ளதாகவும் இருக்கும்.

## என் வாழ்த்துகள் !

அன்புடையீர், வணக்கம்.


மே 2002இல் வெளியான தமிழ்ச்சிட்டு இதழைப் படித்தேன். இவ் விதழ் மூலம் பல நல்ல செய்திகளைத் தெரிந்துகொண்டேன். அதிலும் தேன்மொழியருளியாரின் இனவுணர்வு கொள்வோம் என்ற பாடல் மிகுந்த சிறப்புடன் இருந்தது. மேலும் இவ்விதழ் சிறப்புற வெளிவர என் வாழ்த்துகள் !

ம. செந்தமிழ், செக்கடிக்குப்பம்.


# உலகம் கடந்த காலங்களில் இப்படியே இல்லை.

நாம் இப்போது பார்க்கிற உலகம் கடந்த காலங்களில் இப்படியே இல்லை. கடல் கொந்தளிப்புகளால் அது பெரிய அளவில் மாற்றங்கள் அடைந்தது.

வெளிநாட்டு அறிஞர்கள் தாங்கள் கண்டறிந்த அளவில் அந்தப் படத்தை வரைந்திருக்கிறார்கள். அவற்றுள் சில...




கி.பி. 150 ஆம் ஆண்டு வரையப்பட்ட படம் இது அலெச்சாண்டிரிய நாட்டின் தாலமி என்கிற அறிஞர் வரைந்தார். இதில் நம் பழந்தமிழர்கள் வாழ்ந்த இலெமூரியா எனும் குமரிக்கண்டம் இருப்பது தெரிகிறது.




சேர்மானியர்கள் 1489 ஆம் ஆண்டு ஒரு படத்தை வரைந்து வெளியிட்டார்கள். அதுதான் மேலே உள்ளது.

# துயிலெழு என் தமிழா!

கிரேக்கத்தின்
மிகப்பெரிய கப்பல்
முதலாளி
அரிசுடாட்டில்
ஓனாசிசு. அவர் மிகப்
பெரிய பணக்காரர்
ஆவதற்கும் அவர்
வெற்றி பல
பெற்றதற்கும் காரணம்
என்னவென்று
கூறுகிறார் தெரியுமா?

அதிகமாகத்
தூங்காதீர்கள். நீங்கள்
ஒவ்வொரு நாளும்
தூங்கும் நேரத்தில்
மூன்று மணி
நேரத்தைக் குறைத்துக்
கொண்டால்
வாழ்க்கையில் வெற்றி
பெறுவதற்கான
முயற்சிகளை
மேற்கொள்ள
ஒவ்வொரு ஆண்டும்
உங்களுக்கு
ஒண்ணரை மாதம்
அதிகமாகக்
கிடைக்கிறது.

"உறங்குவதுபோலும்
சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு!

## வினைமுடி பகைபொடி.

—புதுவை. தமிழ்நெஞ்சன்—

எதிர்ப்பார் என்று
எதனையும் தள்ளிப்
போடாதே - நீ
எதிர்த்து வினைமுடி
எய்தும் இன்பம்
தயங்காதே!

பகைவரும் என்று
பதுங்கிக் கிடந்து
அஞ்சாதே - நீ
பகைமை உடைத்துப்
பயனைக் கொடுக்கத்
தயங்காதே!

தடையைக் கண்டு
தயங்கிக் கிடந்து
மயங்காதே! - நீ
தடையைத் தகர்த்துத்
தந்திடு வெற்றி
அஞ்சாதே!

*

## தென்மொழியின் தொலைபேசி எண் மாற்றம்

தென்மொழி அலுவலகத்தின் தொலைபேசி எண் அண்மையில் மாற்றப் பெற்றுள்ளது. இனி, 2771231 எனும் எண்ணே தென்மொழியின் தொலைபேசி எண்.

— அமைச்சர், தென்மொழி.

# உன்னைப் பதிவு செய்!

தேன்மொழியருளி

பணிவு கொள்! அடிமை யாகாதே!
பழிகள் சேரும்; பதுங்கிடாது
துணிவு கொள்! தூய உணர்வில்
தொண்டு செய்! தொல்லைவரும்,
குனிந்திடாத கொள்கை உரத்தில் கொழுமையான
விளைவு காண், கொடுமை
கனிவொடு கொட்டமிடும், கூர்த்த
நோக்கில் வேற்றுமை காண்!
இனிய சூழல் இருளில் வரினும்
ஏற்றிடாதே! இழிவு மிகுந்த
மாந்தப் பண்பை எதிர்த்து நில்!
என்றும் உலகம் பொதுவினது
தனியன் என்று தளர்ந்திடாதே!
தாழ்ந்த மனத்தினை நொறுக்கிநில்!

உன்னை இவ் வுலகில் பதிவுசெய்!
உயர்வொடு மிடுக்கொடு உலவிவா!
மென்மைப் பூவும் மிளிர்ந்து மணக்கும்!
மெல்லிய தென்றே மிதித்திடாதே!
வன்மை உளத்துடன் அன்பு சேர்!
வாழும் முறையில் பண்பு சேர்!
இன்மை நேர்ச்சியே! இழிவிலை காண்க!
ஏறுநடையுடன் ஈட்ட இயங்கு!
புன்மை உறவில் புகுந்திடாதே!
புலமை மிக்காரைப் போற்றிக்கொள்.
தொன்மை அறிவைத் தொழுதுநில்
துலக்க இயக்கம் தொடங்கு எங்கும்
நன்மை தீமை நம்மில் பிறப்பன!
நாடிய நட்பை நயந்து தாங்கு!

❑

# தமிழ் நாடு

எங்கள் நாட்டின் இனிய பெயரே
இன்தமிழ் நாடு — இதில்
தங்கம் போல மாந்தர் ஓங்கிச்
சால்பு கொண்ட நாடு!

கலைகள் எல்லாம் ஓங்கி நிற்கும்
கன்னித் தமிழ் நாடு — இது
அலைகள் போல வரும் எதிர்ப்பை
அலறடித்த நாடு!

திருக்குறளை ஈன்றெடுத்த
செல்வத் திரு நாடு — உயர்
முருகுத் தமிழில் சிலம்பு பாடி
முனைப்பின் நிற்கும் நாடு!

தேனும் பாலும் கரும்பும் கனியும்
சேர்ந்த சுவையைப் போலத் — தமிழ்
வானுயர்ந்த இன்பந் தந்து
வளமை கொண்ட நாடு!

தமிழர் வாழும் நாடு — அழகுத்
தமிழர் வீடு கண்டாய்! — இது
அமிழ்தல் இல்லாப் பெருமை சான்ற
அழகுநன் னாடாமே!

*பாவலர் வடிவேலனார்*

---

# நிலைத்துயர நம்மொழியால் வாழ்ந்திடுவோம்!

சி. வெற்றிவேந்தன்

நண்டுகூடத் தன்மொழியில் பேசுதம்மா!
நத்தைகூடத் தன்மொழியில் கொஞ்சுதம்மா!
வண்டுகூடத் தன்மொழியில் இசைக்குதம்மா!
வானம்கூடத் தன்மொழியில் இடிக்குதம்மா!

அவரவரும் தம்மொழியில் பேசுகின்றார்
அன்பாக இணைந்திங்கே வாழுகின்றார்
குமிழ்ச்சிரிப்புக் குழந்தைகளே வாய்திறந்து
குளிர்ச்சிதரும் தமிழினிலே இனிப் பேசுங்கள்!

அரைகுறையாய் ஆங்கிலமும் நமக்கெதற்கு?
கலவையாகப் பிறமொழியின் வழக்கெதற்கு?
நிறைவாகத் தமிழ்மொழியில் பேசிடுவோம்!
நிலைத்துயர நம்மொழியால் வாழ்ந்திடுவோம்!

## உங்கள் நண்பர்களிடம் சொல்லிவிட்டீர்களா...?

பிறகு,
கிடைக்கவில்லையே என்று
அழுது அடம்பிடித்தாலும்
கிடைக்காது!

ஆம்...

# 'தமிழ்ச்சிட்டு'

புதிய வடிவில்
புதிய பொலிவில்

வண்ணக் குழைவில் - பல்சுவைப் பகுதிகள்.

குறைந்த விலையில் நிறைந்த செய்திகள்....!

ஆண்டுக் கட்டணம் கட்ட அணியமாகுங்கள்...!

அடுத்த மாதம் அறிவிப்பு வந்தவுடன்
கட்டிவிடுங்கள்!

TO

**ஏமாற்றத்தைத் தவிருங்கள்.**

**தமிழ்ச்சிட்டு** (சிறுவர் கலை இதழ்)
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302
தொலைபேசி: 277 1231


601302

26.7.02

தமிழ்ச்சிட்டு, மேடவாக்கம், சென்னை - 601 302.